ET/SSS/2022(2023)/OL/22/T/Q/S-2

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ | 2022 (2023)

# Student Seminar Series

## ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව

Practice Paper | උපකාරක ප්‍රශ්න පත්‍ර

# Tamil Language & Literature

# தமிழ் மொழியும் இலக்கியமும்



**Question Paper - I,II,III** | வினாப்பத்திரம் - I,II,III (மொழிமூலம்-தமிழ்)

Nenasa

The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 22 | T | I |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- உதவிக் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
**G. C. E. Ordinary Level Examination - Support Seminar Series - 2022 (2023)**

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I
தமிழ் மொழியும் இலக்கியமும் I
**Tamil Language and Literature I**

පැය තුනයි.
மூன்று மணித்தியாலம்
Three Hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

தமிழ் மொழியும் இலக்கியமும் I

கவனிக்க
- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. “வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்..” இங்கு **வெகுளி** என்பதன் பொருள்,
1) எரிச்சல் 2) அறியாமை 3) கோபம் 4) பாசம்

02. ‘‘எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக் கொண்டு..’’ - இங்கு **வேறுவியாசம்** என்பதன் பொருள்,
1) வேறு காரணம் 2) மறுகாரணம் 3) போலிக்காரணம் 4) அறியக்காரணம்

03. “பரிந்தவர் நினைவு நாள் பகருவார் இல்லை......” என்பதில் **பரிந்தவர்** என்பதன் எதிர்ப்பொருள்,
1) இறந்தவர் 2) மகிழ்ந்தவர் 3) இகழ்ந்தவர் 4) பிறந்தவர்

04. “...பைவராய் அருங்கானில்..” இங்கு **பைவராய்** என்பதன் எதிர்க்கருத்து,
1) கேடு 2) இன்பம் 3) அமைதி 4) துன்பம்

05. “கார் தட்டிய பஞ்சகாலத்திலே..” இங்கு **தட்டிய** என்பது,
1) மழையற்றுப் போன 2) முகிலற்றுப் போன
3) செல்வமற்றுப் போன 4) விவசாயமற்றுப் போன

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. பொருளால் வேறுபட்ட சொற்களைக் கொண்ட தொகுதி,
1) அசுவம், அரவம், பரி 2) மகவு, சேய், குழவி
3) சீயம், கேசரி, கரி 4) சர்ப்பம், அரவம், பணி

07. தொடர்பற்ற சொற்களின் இணைவு,

1) மரப்பாச்சி - பொம்மை 2) சுனை - நீர்நிலை
3) எயினர் - வேடுவர் 4) கள் - புலால்

08. பொருளால் வேறுபட்ட சொல்,
1) குரிசில் 2) துணைவன் 3) தலைவன் 4) திலகன்

09. ‘ஹியுமானிசம்’ (Humanism) என்ற கலைச்சொல்லின் தமிழ் வடிவம்,
1) மனிதவியல் 2) ஜீவகாருண்யம் 3) மக்கள் நலக்கொள்கை 4) மனிதாபிமானம்

10. ஆட்டின் மலம் பிழுக்கை என்பது போல, ஒட்டகத்தின் மலம்,
1) இலத்தி 2) பிழுக்கை 3) சாணம் 4) விட்டை

11. “கைவிடுவேன் எனறெண்ணி கவலைப்படாதே”, - இங்கு **கைவிடுதல்** என்ற மரபுத்தொடர் தரும் கருத்து,
1) கையை விடுதல் 2) மறந்து போதல் 3) ஏமாற்றுதல் 4) தொலைந்து போதல்

12. **இரங்குதல்** என்ற பொருள் தரும் மரபுத்தொடர்,
1) கால்களைக் கட்டுதல் 2) கண்ணோடுதல்
3) ஆழம் பார்த்தல் 4) கண் மூடுதல்.

13. “யன்னல் சீலையை நீக்கி நீக்கி பார்க்கிறது எனக்குத் தெரியாதோ?” - இங்கு யன்னல் என்பது எம்மொழிச்சொல்,
1) ஒல்லாந்தர் 2) ஆங்கிலம் 3) போர்த்துக்கேயர் 4) பிரஞ்சு

14. மற்றவர்களுக்குக் கொடுப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி என்ற பொருள் தரும் அருஞ்சொற்றொடர்,
1) அகமும் முகமும் மலர்ந்து 2) இகபர இன்பம்
3) கூடிக் குலாவி 4) ஈந்துவக்கும் இன்பம்

15. அரசரும் செல்வரும் தமக்குக் கீழே சேவை புரிவோருக்கு வழங்கும் நிலம்,
1) பாஞ்சன்யம் 2) மாநிலம் 3) நிந்தகம் 4) உறுதி

16. ஆடத்தெரியாதவனுக்கு மேடை கோணல் என்ற பழமொழி தரும் கருத்து,
1) சந்தர்ப்பத்தை பயன்படுத்தத் தெரியாதவன் 2) ஆடுவதற்கு மேடை அமைப்பு இல்லை
3) ஆடுவதற்கு மேடை அவசியம் 4) நொண்டிச்சாட்டு

17. கொடுக்காத செல்வம் அழியும் என்ற கருத்தைத் தரும் பழமொழி,
1) ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார் 2) தர்மம் தலை காக்கும்
3) இட்டுக் கெட்டார் எவருமில்லை 4) பானையில் உண்டானால் அகப்பையில் வரும்

18. ஊமை கண்ட கனவு போல என்ற உவமைத்தொடரின் பொருள்,
1) எல்லாம் வெளிப்படையானது 2) ஊமை கற்பனையில் கனவு காணுவான்
3) ஊமைக்கு கனவு வராது 4) வெளிப்படுத்த முடியாத நிலை

19. “சும்மா சும்மா ட்ரபிள் கொடுக்காதீங்க.” - இங்கு **சும்மா சும்மா** என்பது,
1) இரட்டைக்கிளவி 2) அடுக்குத்தொடர் 3) அடுக்கிடுக்குத்தொடர் 4) இணைமொழி

20. ஆசிரியர் வகுப்பறையில் பாடங்களை தெள்ளத்தெளிவாக விளங்கப்படுத்தினார். - இங்கு தெள்ளத்தெளிவு என்பது,
1) அடுக்கிடுக்குத்தொடர் 2) இணைமொழி 3) அடைமொழி 4) அருஞ்சொல்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. ககரம் ‘h’ என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்காத சொல்,
1) கடல் 2) மேகம் 3) சுகம் 4) அகம்

22. பின்வருவனவற்றுள் பண்புப் பெயர் பெற்றமைந்த சொல்,
1) வேணிலான் 2) நன்மை 3) போதல் 4) தேட்டம்

23. பின்வருவனவற்றுள் பின்னொட்டு ஏற்றுள்ள சொல்,
    1) அவமானம் 2) அல்வழி 3) தனவான் 4) சுயவரம்

24. இயல்புப்புணர்ச்சியாக அமைந்த சொல்,
    1) மனவேதனை 2) தொடரூந்து 3) வெளிக்களம் 4) வாட்படை

25. ''ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவு..'' - இங்கு ''ஓடு மீன்'' என்பது எவ்வகைத்தொகை?
    1) பண்புத்தொகை 2) உம்மைத்தொகை
    3) உவமைத்தொகை 4) வினைத்தொகை

26. **கொல்லப்பட்டான்** என்பதன் பகுதி,
    1) கொல் 2) கொல்லு 3) கொல்ல 4) கொல்லப்படு

27. ''வீழுமோர் இடையூற்றினுக்கு அஞ்சுவோர்..'' - இங்கு அஞ்சுவோர் என்பது,
    1) தொழிற்பெயர் 2) காரணப்பெயர் 3) வினையாலணையும் பெயர் 4) ஆக்கப்பெயர்

28. அகராதி ஒழுங்கில் அமையாத சொற் கூட்டம்,
    1) தச்சன், தட்டம், தத்தை, தற்சமம்
    2) வண்ணம், வீசும், வெற்றி, வேங்கை
    3) ஈசல், கண்ணன், பட்டம், தம்பி
    4) அலரி, ஆச்சிரமம், கேண்மை, கோவில்

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29. 1) வேற்றுமைத்தொகை :- கற்கோவில், மரவீடு, குளக்கரை
    2) வினைத்தொகை :- குளிர்காற்று, வருபுகழ், சிறுவீடு
    3) பண்புத்தொகை :- செவ்வகம், நீள்வட்டம், நல்வழி
    4) உவமைத்தொகை :- கார்குழல், தேன்மொழி, மலராசனம்

30. 1) தன்வினை :- கண்டான், பார்த்தோம், பிடித்தார்
    2) பிறவினை :- கடந்தார், எடுப்பித்தார்கள், எழுதுவித்தோம்
    3) செய்வினை :- விற்றார், எடுத்தோம், பறித்தனர்
    4) செயப்பாட்டுவினை :- வாங்கப்பட்டன, தீர்க்கப்பட்டது, காண்பிக்கப்பட்டது

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. மத்திய வங்கி ......................... இன்று ஜனாதிபதி அவர்களை சந்திக்கின்றார்.
    1) ஆணையாளர் 2) தலைவர் 3) ஆளுநர் 4) அதிபர்

32. கைது செய்யப்பட்ட குற்றவாளிக்கு நீதிபதியால் ……………….... வழங்கப்பட்டது.
    1) பிடியாணை 2) வாக்குமூலம் 3) பிணை 4) அழைப்பாணை

33. நாட்டில் வேகமாகப் பரவிவரும் டெங்கு நோயை ஒழிப்பதற்கான ……………..... சுகாதாரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.
    1) அறிவித்தல் 2) பிரசாரம் 3) பிரசங்கம் 4) அறிக்கை

34. மாணவர்களுக்கான ……………….. காப்புறுதித்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது.
    1) அக்ரஹார 2) சிசுஉதான 3) சுரக்ஷா 4) இசுறு

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மீள் திருத்தத்துக்கான கால அவகாசம் ..........................................
    1) நீடிக்கப்பட்டது. 2) நீடிக்கப்பட்டன. 3) நீடிக்கப்பட்டுள்ளன. 4) நீட்டப்படும்.

36. நல்லெண்ணங்களை வெளிப்படுத்திய மக்கள் கூட்டம் வீதியெங்கிலும் ……………………
1) நிற்கின்றனர். 2) நின்றனர். 3) நிற்கும். 4) நின்றது.

- **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

தமிழ்மொழிப் பெருமை யெல்லாம்
தண்மையும் உண்மை தானும்
அமிழ்தென அதனைச் சொல்லல்
அழிவிலா அறிவுக் காக
குமிழ்தர இவற்றின் மேன்மை
குலவிடும் கவியால் ஞானம்
கமழ் தரச் செய்யும்.

37. இங்கு பேசும் பொருளாக அமைவது,
1) அழிவில்லா அறிவு 2) அமுதத்தின் சிறப்பு
3) தமிழின் பெருமை 4) ஞானத்தின் வாசனை

38. தமிழ், அமிழ், குமிழ் ஆகிய சொற்களில் பயின்றுள்ள அணி யாது?
1) மோனை 2) சிலேடை 3) உருவகம் 4) எதுகை

39. "..ஞானம் கமழ் தரச் செய்யும்.." - இங்கு கமழ் என்பது,
1) ஒளி 2) பரவுதல் 3) வாசனை 4) வீசுதல்

40. **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

அ) இவற்றில் ஏறி நின்று கொளுத்தினால் கூடுகளை எடுக்கலாம்.
ஆ) இம்மேடைகள் குகையின் முகடு வரையும் கட்டப்பட்டுள்ளன.
இ) குன்றில் ஏறி, பின்பு ஏணி மூலமே குகைக்குள் இறங்க வேண்டும்.
ஈ) உயர் பூமியிலுள்ள குகை சிறியதும், இடைநிலையில் உள்ளதுமாகும்.
உ) இவ்வாறு செல்ல மேற்குகைகளிலும் படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1) இ, உ, அ, ஆ, இ 2) இ, ஆ, அ, ஈ, உ
3) ஈ, ஆ, உ, அ, இ 4) ஈ, ஆ, அ, உ, இ

*****

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 22 | T | II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- உதவிக் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination - Support Seminar Series - 2022 (2023)

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය II
தமிழ் மொழியும் இலக்கியமும் II
Tamil Language and Literature II

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்குக.**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**01) சுருக்கமான விடை எழுதுக.**

1. ‘நைவீர லீர்மைந்தீர்’ என்னும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

2. திரிகூடராசப்ப கவிராயரால் இயற்றப்பட்ட குற்றாலக் குறவஞ்சி சிறந்ததொன்றாகக் கருதப்படுகின்றது. இவ்வாக்கியத்தின் எழுவாய் யாது?

3. அதையொரு கதையாகவோ பார்த்துக் கணிக்க முடியும்.
அதையொரு நாடகமாகவோ பார்த்துக் கணிக்க முடியும்.
இவ்விரு வாக்கியங்களையும் ஓரே வாக்கியமாக்கி எழுதுக.

4. ஆசிரியரால் கவிதை, பாடல், கட்டுரை என முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டன.
மேலே தரப்பட்டுள்ள செயற்பாட்டுவினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

5. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு, அதனை மீண்டும் எழுதுக.
எமன் கையில் பட்டபாடுபட்டேன் என்றார் காளமேகம்

6. உலகம் இனிது நடைபெறுதற்கும், மக்கள் உயர் நலமுறுதற்கும் இலட்சியங்கள் கருவியாகின்றது.
இவ்வாக்கியத்தை வழுவற்ற வகையில் திருத்தி எழுதுக.

7. சமூகம், சமுகம் என்பன பொருள் தரும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து காட்டுக.

8. இரு மரப்பாச்சிகளோடும் உலர்ந்து போன குறிஞ்சிப் பூக்களின் மாலையோடும் வருகின்றாள். இவ்வாக்கியம் மூன்றாம் வேற்றுமையின் எப்பொருளில் அமைந்துள்ளது?

9. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை இயேசுவைப் பற்றி, புத்தரைப் பற்றி பாடியுள்ளார்.
இவ் உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.

10. “ஆடாதோடையும் கொத்தமல்லியும் அவித்துக் குடித்து விட்டு எழுந்து நடக்குறா.” இங்கு இடம்பெற்ற ஆடாதோடை என்ற மரூஉச் சொல்லை இலக்கணமுடையதாக மாற்றி எழுதுக.

**(2 X 10 = 20 புள்ளிகள்)**

**02.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250 சொற்களில்** அமையுமாறு விடை எழுதுக. தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i). ஒரு நாட்டின் மக்களின் வாழ்வாதாரத்திலும், பொருளாதாரத்திலும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக சிறுதானியங்கள் விளங்குகின்றன. இவை ஊட்டச்சத்துக்களையும், வருமானம் ஈட்டும் துறையாகவும், ஏற்றுமதிக்கு வழிவகுப்பதாகவும், தன்னிறைவுத் தேவையினை நிறைவு செய்வதாகவும் விளங்குகின்றன. ஆனால், இன்று பல்வேறுபட்ட உணவு கலாசாரத்தினால் சிறுதானியங்கள் கைவிடப்பட்டதாகவும், பயனற்றவையாகவும் கருதப்படுகின்றன. இவற்றுக்குத் தொழிநுட்பங்களின் வருகையும் ஒரு காரணமாக கருதப்படுகின்றது. எமது எதிர்கால சந்ததியினரின் சுபீட்சமான வாழ்வை இலக்காகக் கொண்டு சிறுதானிய உற்பத்தியினை மீண்டும் ஊக்குவிக்க வேண்டும் என்ற கருத்தில் அமைந்த ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii). நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் வெளிநாடு சென்று வருமானத்தை அதிகரித்து, அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொண்டு வேலைவாய்ப்புச் சந்தர்ப்பத்தை உருவாக்கி, தற்போதய சூழ்நிலைக்கேற்ப குடும்ப செலவீனத்தை ஈடுசெய்யலாம் எனக் கருதி வெளிநாட்டுக்கு வேலை தேடிச் செல்லவுள்ள ஒருவருக்கும், நெற்களஞ்சியம் எனப் போற்றப்படும் நமது நாட்டிலேயே பல்வேறு துறைகளிலும், பல்வேறு வழிகளிலும் உள்ளூர் உற்பத்திகள் மூலம் நமக்குத் தேவையான வருமானத்தை அதிகரித்து உள்ளூரிலே வருமானத்தை அதிகரிக்கலாம் எனக் கருதும் இன்னொருவருக்கும் இடையிலானதொரு **உரையாடல்.**

(iii). தமிழ்மொழியில் போதிய தேர்ச்சி பெறும் ஒருவராலேயே ஏனைய மொழிகளிலும் தேர்ச்சி பெற முடியும். தாய்மொழி என்பது, நாம் பிறந்தது முதல் கேட்டும், கற்றும், அறிந்து கொண்ட விடயமாகவே உள்ளது. அப்படியானதொரு தாய்மொழிக் கல்வியானது, தற்போது குறைந்து வருகிறது. பிறமொழிக் கல்வி தலையெடுத்துள்ள நிலையில் தாய்மொழி கல்வியினாலேயே எமது கலாசாரங்கள், பண்பாடுகளை மேம்படுத்துவதுடன் கட்டிக்காக்கவும் முடியும் என வலியுறுத்தி, சிறுவயதிலிருந்தே தாய்மொழி மூலமாகவே கல்வி கற்க வேண்டும் எனவும், அதனாலேயே மொழியினை அறிந்து கொள்ள முடியுமெனவும் வலியுறுத்தி ஒரு **மேடைப்பேச்சு.**

(iv). இன்று காயாவின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒருநாள். அவள் அகில இலங்கையில் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தினை தன்னகத்தே கொண்டதுடன், உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களிலும் சிறப்புச் சித்திப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற பொன்னாளும் ஆகும். அவள் கல்விகற்ற பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் பெருமிதம் கொண்டு வாழ்த்தினாலும், அவளது மனமோ கடந்து வந்த துன்பப்பாதையை நினைத்து, பின்னோக்கிச் செல்கின்றது. இக்கருத்து புலப்படும் வகையில் ஒரு **சிறுகதை.**

**(25 புள்ளிகள்)**

**03.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

பாரதியார் ஒரு மறுமலர்ச்சிக் கவிஞர் ஆவார். இவரின் கவிதை வரிகள் ஒவ்வொன்றும் தமிழரின் மனங்களில் வேல் பாய்ச்சி அவர்களின் மனங்களிலும் தாக்கத்தினை உண்டு பண்ணின. விடுதலை பாரதியாரின் மூச்சாக மாறியது. தமிழ்ச் சமுதாயத்திலும் அவர்களின் ஒவ்வொரு அலுவல்களிலும் தமிழ் இலக்கியங்களிலும் விடுதலை வேண்டி முன்னின்றவர் பாரதி. இவர் தமிழ்ச் சமூக ஒற்றுமையை சர்வசமய ஒற்றுமையோடு கட்டியெழுப்ப முயன்றவர். ஆகவே, இந்துசமய பிரிவுகளைப் பாடுவதில் தாயுமான சுவாமிகள், இராமலிங்க அடிகளார் கூறிய கருத்துக்களினின்றும் தாம் ஒரு படி மேல் நின்று தன்னுடைய கவிதைகளில் கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாமியக் கடவுளரையும் பாடியுள்ளமை சிறப்பிற்குரியது. இவர் தன் கவிதைகளில் சாதாரண மக்களினுடைய வாழ்க்கை முறைமையை பொருளாகக் கொண்டு பாடியுள்ளார். இவர் புதுமைக்கவிஞர், புதுயுகக்கவிஞர் எனவெல்லாம் போற்றப்படுகின்றார். ஆகவே, இதற்கிணங்கப் பாரதியார் புதுமை எல்லாவற்றினையும் போற்றினாரா? எனும் வினாவிற்கு இல்லை என்பதே பதில். ஆனால் புதுமையின் மோகத்தில் கிடந்த தமிழர்களை அம்மயக்கத்திலிருந்து விடுவித்து தமிழர்களாக வாழச் செய்த பெருமை இவரைச் சாரும். பாரதியார் புதியதொரு வழியினை தமிழர்களுக்கு காட்டினார். புதுமையினை உணர்த்தினார். தமிழர்களின் தன்மான உணர்வினை வளர்த்தெடுப்பதற்காகப் பழமையைத் தன் கவிகளாகப் பாடினார். பழமைச் சிறப்பு பெற்ற தமிழர் புதுமைச் சிறப்பும் பெற வேண்டும் என அவர் ஆசைப்பட்டார். இந்தியப் பழமையிற் காணப்பட்ட சீர்கேடுகள் பலதை இவர் ஆணித்தரமாக கண்டித்தார். உலகநிலையாமை, வாழ்க்கை நிலையாமை பற்றிய கருத்துக்கள் தத்துவங்களில் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறப்படுகின்றன. உலகம் உண்மை இல்லை என்பதனையும் உலகத்தை வெறுப்பது மற்றும் மறுப்பது என்பது

உயர்ந்த ஞானமாக சொல்லப்படுகின்றது. உலகியலில் ஈடுபாடின்மை என்பது எல்லோரும் முயற்சிக்க வேண்டியதொன்று. உலகம் பொய் எனும் தத்துவக் கருத்துக்கள் இந்துக்களின் உலகியல் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதனை பாரதியார் உணர்ந்தார். அதனால் தான் ''காண்பதே உறுதி கண்டோம் காண்பதல்லால் உறுதியில்லை காண்பது சக்தியாம் - இந்தக் காட்சி நித்தியமாம்'' என பாரதியார் அவரின் கவிதையில் பாடுகின்றார்.

**(10 புள்ளிகள்)**

**04.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

விமர்சன இலக்கியம் என்று கூறும்பொழுது நவீன காலத்தில் எழுந்த புதுத்துறை ஒன்றினைக் கருத்திற் கொண்டிருக்கிறோம் என்பதை வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை என்றே எண்ணுகிறேன். சிறுகதை, நாவல், வசன நாடகம் முதலிய சில வடிவங்களையும் துறைகளையும் போலவே விமர்சனமும் நமது மொழியிலே நவீனத்துவத்தின் வெளிப்பாடாக அமைந்துவிட்ட ஓர் இலக்கியப் பிரிவு என்று கூறுதல் தவறாகாது. அகலுலகத் தொடர்பும் நமது சமுதாயத்திலே உருவாகி வந்துள்ள சில சமூக சக்திகளும் சிந்தனைகளும் விமர்சனம் தோன்றி வளர்வதற்கான உந்துதல்களாய் உள்ளன என்றும் குறிப்பிடலாம்.

விமர்சன இலக்கியத்தை ஏனைய நவீன துறைகளாம் சிறுகதை இலக்கியம், நாவலிலக்கியம், பிரயாண இலக்கியம் என்பவற்றோடு நோக்குமிடத்து மேற்கண்டவாறு கூறத் தோன்றுகிறது. ஆயினும் விமர்சனம் என்பதனை ஓர் அணுகுமுறையாகவும் ஆய்வு முறையாகவும் கொண்டு பார்த்தால், அதன் செயற்பாட்டினை மிகப் பழங்காலத்திலிருந்தே நமது நூல்களில் ஆங்காங்கு காணலாம். இலக்கியத்திலே சிவனுடன் நக்கீரர் நிகழ்த்தியதாய்க் கூறப்படும் சம்வாதத்தை விமர்சன நோக்கிற்கு எடுத்துக்காட்டாகப் பலர் குறிப்பிடுவதுண்டு. பழைய உரையாசிரியர்களது ஆக்கங்களிலே விமர்சனப் பாங்குடைய கூற்றுக்களும் அவதானிப்புகளும் இடையிடையே இலங்குவதைப் பலர் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேழலகர் முதலியோர் காலத்தால் முற்பட்ட நூல்களைத் தத்தம் சூழ்நிலைகளுக்கேற்ப விவரித்தும் விளக்கியும் அமைதிகாண முயன்றபொழுது விமர்சன முயற்சிகளில் ஈடுபட்டனர் எனக் கொள்ளல் மிகையாகாது. எனினும், இலக்கிய இலக்கண உரையாசிரியர்களைப் பார்க்கிலும் சமய, தத்துவ சாத்திர நூல்களுக்கு விளக்கங்காட்டியுள்ளன.

1. நவீனத்துவ வெளிப்பாடாக அமைந்த வடிவங்கள் எவை?
2. விமர்சனம் தோன்றி வளர்வதற்காக உந்துதலாய் அமைந்தவை யாவை?
3. பழங்கால விமர்சன நோக்கங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைபவை எவை?
4. பழங்கால விமர்சகர்களாகக் கூறப்படுபவர்கள் யாவர்?
5. எந்நூல்களுக்கு எழுதப்பட்ட உரைகள் சிறந்ததாக கூறப்படுகின்றன?

**(10 புள்ளிகள்)**

05. தமிழின் மூத்த எழுத்தாளரும் விமர்சகருமான திரு.ச.சிவக்குமார் யாவரும் அறிந்த இலக்கியவாதி ஆவார். வள்ளுவர்புரம் கணபதி வித்தியாலய தமிழ் மன்றச் செயலாளராகிய, சி.துவாரகா என உம்மைக் கருதிக்கொண்டு, அச்சங்கத்தின் ஆண்டு நிறைவையொட்டி, மாணவர்களால் எழுதப்பட்ட சிறுகதைத் தொகுப்பினை வெளியிடும் விழாவிற்கு தலைமை தாங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுமாறு வேண்டி திரு.ச.சிவக்குமார் அவர்களுக்கு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

- சிறுகதையினுடைய முக்கியத்துவம்
- நிகழ்வுகள் குறித்த தரவுகள்
- பிரதம விருந்தினராக கலந்துகொள்வதற்கான அழைப்பு

**அல்லது**

இன்றைய மனித வாழ்க்கையில் ஆரோக்கியமான உணவு என்பது, அற்று துரித உணவே செல்வாக்கு செலுத்துவதாக உள்ளது. துரித உணவின் பாதகங்களைக் குறிப்பிட்டு, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பாரதி நகர் உணவுக் கட்டுப்பாட்டு பிரிவினர் சார்பில் 100 சொற்களில் ஒரு விழிப்புணர்வுத் **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

- துரித உணவுகளின் பாதகமான விளைவுகள்
- ஆரோக்கிய உணவு பழக்கவழக்கங்களும் அதன் முக்கியத்துவமும்
- துரித உணவுப் பழக்கத்திலிருந்து விடுபடும் வழிகள் **(15 புள்ளிகள்)**

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 22 | T | III |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- ஆதரவு கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination - Support Seminar Series - 2022 (2023)

| | |
|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය | III |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | III |
| Tamil Language and Literature | III |

தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க:**

- ❊ அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❊ **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- ❊ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1. சுருக்கமான விடை தருக.**

(i) "அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்"

(அ) 'அறிந்தறிந்தும்' என்பதால் கூறப்படுவது யாது?

(ஆ) 'வால்குழைக்கும்' என்ற மரபுத்தொடர் தரும் கருத்து யாது?

(ii) "யாதும் ஊரே யாவரும் கேளீர் என்றும்
யாதானும் நாடாமால் ஊராமால்"

(அ) 'கேளீர்' என்பது குறிக்கும் கருத்து யாது?

(ஆ) 'ஊராமால்' என்பதால் நீர் கருதுவது யாது?

(iii) "ஊனையும் உடலையும் ஊட்டி இம்மண்ணை உயிர்த்தவர்க்கு
இங்கே உளங்கசிந்து அன்பு பூணுவாரில்லை"

(அ) 'இம்மண்' எனக் குறிப்பிடப்படுவது எது?

(ஆ) 'பூணுவார்' என்பதன் பொருள் என்ன?

(iv) "உடர் எலாம் முயிரிலா எனத்தோன்றும்
உலகத்தே யொருத்தி யன்றே"

(அ) 'உடர் எலாம் முயிரிலா' என்பது எவ்வகை அணி?

(ஆ) ஒருத்தி எனப்படுபவர் யார்?

(v) "நண்ணுறப் பெறல் திண்ணம் தாமென
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்"

(அ) 'நண்ணுறல்' என்பதன் கருத்து யாது?

(ஆ) 'ஞானியர்' என்போர் யார்?

(vi) "சினிமா படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்சியுமல்ல"

(அ) இங்கு இடம்பெற்ற கலைச்சொல் யாது?

(ஆ) நிகழ்ச்சி என்றால் என்ன?

(vii) "இருமிடை மிடைந்த சிலசொற்

பெருமூதாளரே மாகிய வெமக்கே"

(அ) 'இருமிடை' என்பதன் கருத்து யாது?

(ஆ) 'பெருமூதாளரே' என்பதனால் நீர் கருதுவது யாது?

(viii) "அன்னநடை மைவிழியா ளம்பொன்மலர்க் கொம்பனையாள்

என்னிதய தாமரைக்கோ ரிலக்குமியாம் பெண்ணரசி"

(அ) 'மைவிழியாள்' என்பது குறிக்கும் பொருள்?

(ஆ) இதயத்தாமரை என்பது எவ்வகை அணி?

(ix) "சேற்றோடு வெள்ளம் தெளிந்து வருமாப் போல்

செங்கால் நாரையினம் மேய்ந்து வருமாப்போல்"

(அ) இப்பாடல் எப்போது பாடப்படும்?

(ஆ) 'மேய்ந்து வருதல்' என்பதால் கூறப்படுவது.

(x) "நாங்கள் ஒருவருடன் ஒருவர் கம்பியூட்டர்

பரிபாசையிலேயே பேசப்பழகிக் கொண்டோம்"

(அ) நாங்கள் எனக் கூறப்படுவோர் யாவர்?

(ஆ) 'பரிபாஷை' என்றால் என்ன? **(2 X 10 = 20 புள்ளிகள்)**

2. பின்வரும் செய்யுட்பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது

(அ) இப்பாடலில் பாம்பின் செயல்களாகக் குறிப்பிடப்படுபவை யாவை?

(ஆ) எள்ளுக்கு உண்டெனக் கூறப்பட்ட விளைவுகள் யாவை?

(ii) முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவி னீசர்

வளம்பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே

(அ) இப்பாடலில் அருவியின் செயல் எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?
(ஆ) மலைவளச் சிறப்பு எவ்வாறு மிகைப்படுத்தப்பட்டுள்ளது?

(iii) புலங்க ளோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்களேது விரும்புவன் அங்கவை
நண்ணு றப்பெறல் திண்ணம் தாமென
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன்
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே

(அ) பாரதியார் மெய்யெனத் தேர்ந்த விடயங்கள் யாவை?
(ஆ) ஒருவர் எப்போது விண்ணை அடையலாம்?

(iv) தமிழர் பண்பாட்டில் பக்தி எங்ஙனம் சிறந்து விளங்கியதோ நீதியும் அவ்வாறே சிறந்து விளங்கியுள்ளது. பாரதியாரின் ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் பெற்ற தமிழ்நாடு’ என்னும் கூற்றைச் சிந்திக்கும் பொழுதெல்லாம் அதன் உண்மையை உணர முடிகின்றது. உலக நீதி இலக்கியங்களைச் சிறப்பாக ஆராய்ந்து அரும்பெரும் நூல்களை இயற்றிய அல்பேட் சுவைட்சர் என்னும் மகாத்மா திருக்குறளைப் பற்றி எழுதும் போது திருக்குறளைப் போல் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட ஒரு நூலை இவ்வுலகில் காண்பது அரிது என்று குறிப்பிட்டுள்ளார்.

அ. நீதி சிறந்து விளங்கியதென்பதற்கான சான்றாகக் கூறப்படுவது யாது?
ஆ. இந்த உலகில் திருக்குறளுக்குள்ள உயர்ந்த மதிப்பு யாது?

(v) காட்சிப்படிமங்களில் மூலமே மட்டுமே பொறாமை, எரிச்சல், அதிருப்தி, பொறுமையின்மை எனும் மனித மனத்தின் வெவ்வேறு நிலைகளை ஹிட்ச்சாக் காட்டினார். ‘காட்சிப் படிமங்கள் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூற முயன்றால் அங்கே சினிமா சீரழிகிறது’ என்கிறார் ஹிட்ச்சாக். தமிழ் சினிமாவில் காட்சிப்படிமங்களால் கதை சொல்லும் முறை சரியாக வளரவில்லை. இது இந்தி சினிமாவுக்கும் பொருந்தும். பேசும் படம் பிறந்த நாளிலிருந்து, பேசும் பேச்சால் கதை சொல்லும் வழக்கம் வேரூன்றி, அது ஒரு பாரம்பரியமாகவே ஆகிவிட்டது.

அ. காட்சிப்படிமம் மூலம் சொல்லக் கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூறக்கூடாது என்பதற்குரிய காரணம் யாது?
ஆ. இங்கே ‘சரியாக வளரவில்லை’ என்பது எப்பின்னணியை மையமாகக் கொண்டு பேசப்பட்டது.

**(4 X 5 = 20 புள்ளிகள்)**

3. **கம்பியூட்டர்** என்ற சிறுகதையில்,

(அ) கதை சொல்லிக்கு கம்பியூட்டரால் கிடைத்த பயன்
(ஆ) கதை தொலைந்ததால் கதை சொல்லி அடைந்த அவஸ்தை

போன்றன சித்திரிக்கப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.

**அல்லது**

**இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையில்,

(அ) இலட்சியம் என்பதற்கும்
(ஆ) சமநோக்கம் என்பதற்கும்

கட்டுரையாசிரியர் தரும் கருத்தினை விளக்குக. **(15 புள்ளிகள்)**

**4. தத்தைவிடு தூதில்,**

(அ) காதலி பற்றிய வர்ணிப்பும் அன்பின் ஆழமும்

(ஆ) பெண்ணுரிமைக் கருத்துக்களும்

வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை தெளிவுறுத்துக.

**அல்லது**

**குகப்படலத்தில்** இராமன் பிரிவால்,

(அ) கோசலை, சுமித்திரை அடைந்த துயரமும்

(ஆ) பரதன் அடைந்த துயரமும்

வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

**5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

5. **சீறி ஓடாத வருங்கால மனிதநதியில்,**

(அ) பையன் மீது பரிவு ஏற்படுவதற்கான காரணங்களும்

(ஆ) எழுத்தறிவின் அவசியங்களும்

குறிப்பிடப்பட்டுள்ள விதத்தினை விளக்குக.

6. **'நாவலர் எழுந்தார்….'** என்ற கட்டுரையில்,

அ. நாவலர் தலைமை வகிக்காததற்கான காரணங்களும்

ஆ. விசுவநாதபிள்ளை தலைமை வகித்தமைக்கான பின்னணியும்

இடம்பெற்றுள்ள வகையினை விளக்குக.

7. **தண்டாமரையினுடன் பிறந்தும்** என்ற பாடலில்,

அ. அறிவுடையோர் இயல்பும்

ஆ அறிவற்றோர் இயல்பும்

சித்தரிக்கப்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக. **(10 புள்ளிகள்)**

*****